செ.வெ.எண்: 53 நாள்:25.05.2018

# அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (25.05.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 954 மி.மீ ஆகும். நடப்பு ஆண்டில் இம்மாதம் இது நாள் வரை 57.53 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு தேவையான 965 மெ.டன் யூரியா, 498 மெ.டன் டி.ஏ.பி, 531 மெ.டன் பொட்டாஷ் மற்றும் 741 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பில் உள்ளது.

இதுவரை சான்று பெற்ற நெல் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் மூலம் 1 மெ.டன், தனியார் விதை விற்பனை மையங்கள் மூலம் 1 மெ.டன் என கூடுதலாக 2 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தற்போது வேளாண்மை விரிவாக்க மையங்களில் 12 மெ.டன் மற்றும் தனியார் கடைகளில் 2 மெ.டன் ஆக மொத்தம் 14 மெ.டன் நெல் விதைகள் கையிருப்பில் உள்ளது.

பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் வறட்சி மற்றும் இதர இயற்கை பேரிடரின் போது ஏற்படும் மகசூல் பாதிப்பில் இருந்து விவசாயிகளை காக்கும் பொருட்டு பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்யும் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பிற்கு ஏற்றவாறு பயிர் இழப்பீட்டு தொகை சம்பந்தப்பட்ட பயிர்காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படும். கடந்த 2016-17 ஆம் ஆண்டு சம்பா பருவத்திற்காக பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகையாக ரூ.20.45 கோடி பெறப்பட்டு 14311 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது.

நடப்பு 2018-19 ஆம் ஆண்டிற்கான காரீப் பருவத்திற்கு பயிர் காப்பீடு செய்வதற்கான அறிவிக்கை பெறப்பட்டுள்ளது. இதில் நெல் குறுவை பயிருக்கு பிரிமியத் தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ.591 நிர்ணயிக்கப்பட்டு 31.07.2018-க்குள் பயிர் காப்பீடு செய்திட காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே போல் இதர பயிர்களான உளுந்துக்கு ரூ.286-ம் சோளத்திற்கு ரூ.196ம், பருத்திக்கு ரூ.1240, கம்பிற்கு ரூ.196-ம், எள்ளுக்கு ரூ.240-ம், கடலைக்கு ரூ.498-ம், மக்காச்சோளத்திற்கு ரூ.405-ம் மற்றும் துவரைக்கு ரூ.286 வீதம் பிரிமியத் தொகை நிர்ணபிக்கப்பட்டு 16.08.2018-க்குள் பயிர் காப்பீடு செய்திட காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 16.08.2018-க்குள் பயிர் சாகுபடி செய்ய இயலாத விவசாயிகள் முன்னதாகவே கிராம நிர்வாக அலுவலரிடம் பயிர் செய்ய உள்ளதற்கான சான்று பெற்று விண்ணப்பிக்க வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு பின் பயிர் காப்பீடு செய்வர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்படமாட்டாது. மேலும், பயிர் வாரியாக அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெற இயலும். திட்டங்கள் தொடர்பாக எழும் சந்தேகங்களுக்கு சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மானிய விலையில் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ்** தற்போது பருவமழை குறைவாக கிடைத்து வருவதால் நிலத்தடி நீரின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அதற்கு ஏற்றாற் போல் வேளாண் துறையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்தி சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கோடு வேளாண்துறை மற்றும் தோட்டக்கலைத்துறைகள் மூலம் சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசன கருவிகளை அமைக்க விவசாயிகளுக்கு அரசு மானியமாக நமது மாவட்டத்திற்கு ரூ.7.92 கோடி நிதி இலக்கு ஒதுக்கீடு செய்து பெறப்பட்டுள்ளது.

சிறு/குறு ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் பாசன கருவிகளை தங்களது வயல்களில் நிர்மானித்துக்கொள்ள மானியம் அனுமதிக்கப்பட்டு வருகிறது. 75 சதவீத மானியத்தில் பயன்பெறும் இதர விவசாயிகள் மீதிப் பங்குத் தொகையை வங்கி வரைவோலையாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். சிறு/குறு ஆதிதிராவிட விவசாயிகள் வருவாய்த்துறையில் சான்று பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயன்பெற்றிட சொந்த நிலத்தில் பயிர் சாகுபடி செய்து வருவதற்கான சிட்டா மற்றும் அடங்கல், வயல் வரைபடம் மற்றும் மின் இணைப்புடன் நீர் ஆதாரம் உள்ளமைக்கான சான்றுகளுடன் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற இதர ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுலவர் சே.தனசேகரன், இணை இயக்குநர் (வேளாண்மை) அய்யாசாமி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) அன்புராஜன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், ஏராளமான விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**